sold through these shops occasionally when stocks imported on Government account are available. But the Government do not undertake a systematic supply of dhalls and other pulses. There are also areas where no need is felt for distribution of rice through fair price shops, because of open market availability. In such areas wheat products, sugar and occasionally pulses are distributed through other dealers, generally provision merchants and grocery dealers.

திரு. பி. எத்திராஜ் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கோதுமை தருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் கிராமங்களில் உற்பத்தியாகிற அரிசியையும், சர்க்கரையையும் நகரப் புறங்களில், குறிப்பாக பெரிய நகரங்களுக்கு, உள்ளவர்களுக்கு, கொடுத்துவிட்டு உற்பத்தி செய்கிற விவசாயிகளை அலட்சியப்படுத்துவது சமூக நீதியாகுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : விவசாயப் பெருமக்கள் தான் விவசாயம் செய்யாத மக்களுக்கு தங்கள் உழைப்பினால் விளைந்த தானிய மணிகளை வழங்குகிறார்கள். அதுதான் உண்மையான சமூக நீதி.

திரு. என். ஆர். தியாகராஜன் : மதுரை ஜில்லாவில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நெல் விளையாமல் குளங்கள் வரண்டு தாழ்ந்து போன பகுதிகளுக்கு அரசு, பருப்பு . சர்க்கரை போன்ற பொருள்களை கொடுக்க விசேஷ ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மதுரை மாவட்டத்தின் மீது இந்த அரசாங்கத்திற்குக் கோபம் எதுவும் இல்லை. எல்லா மாவட்டங்களிலும் அதுபோன்ற பகுதிகள் இருந்தால் அங்கங்கே நம்முடைய தானிய கையிருப்புக்குத் தக்கபடி அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் இருக்கிற நிலைமையை அனுசரித்தும் நம்மிடத்தில் உள்ள இருப்பை பொருத்தும் ஏற்பாடு செய்யலாம். இப்போதுள்ள நிலையில் கோதுமை, சர்க்கரை இவற்றிற்கு டில்லியிடமிருந்து கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அவர்கள் கொடுக்கும் அளவில் " சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும் " என்றபடி கொடுக்கப்படும்.

Rat menace to crops

* 200 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether roughly two lakhs of rats were killed recently on the outskirts of Valangaiman Panchayat Union, Thanjavur district ; and

(*b*) whether steps will be taken to kill rats in all parts of the Madras State in order to prevent the destruction to crops ?

பயிர்களை நாசம் செய்யும் எலிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) தஞ்சை ஜில்லா வலங்கைமான் பஞ்சாயத்து ஒன்றிப்பு எல்லையில் சுமார் 2 லட்சம் எலிகள் சமீபத்தில் கொல்லப்பட்டனவா ?

(இ) இதைப்போன்று தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் பயிர்கள் நாசமாவதைத் தடுக்க எலிகளைக் கொல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) and (இ).

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, சமீபத்தில் சீனச் செய்தி ஒன்றைக் கேள்விப்பட்டேன். கோடிக்கணக்கான எலிகளையும்,

7th March 1968]

தேவையற்ற பூச்சிகள், பறவைகள் முதலியவற்றையும் கொல்லுவதால் உணவு நெருக்கடி தீர்க்கப்படுகிறது என்று. ஆகவே வலங்கைமானில் ஏற்பட்ட நிலைமையைத் தமிழகத்தில் எல்லா இடங்களில் உண்டாக்க ஏற்பாடு செய்வார்களா ? பெரியகுளத்தில் எலிகளைக் கொல்லுவதற்கு ஒரு ஏற்பாடு செய்தார்கள். அதாவது எலிகளைப் பிடித்து க்கொன்று கொண்டு வந்து முனிசிபல் ஆபிஸில் போட்டால், 4 அணு என்று கொடுத்து விடுகிறார்கள். அந்த திட்டம் போல் இந்த மாநிலம் பூராவும் போட்டு எலிகளை ஒழிக்க ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பத்திரிகையில் படித்த செய்தியைப் போல் மத்திய அமைச்சர் ஒருவர் எலிகளைச் சாப்பிட்டால் உணவு பிரச்னை தீருமென்றும் அறிவித்திருக்கிறார். அதையும் அங்கத்தினர் படித்திருப்பார் என்று கருதுகிறேன். பெரிய குளத்தில் எலிகளை தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்போதும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். "சிங்க் பாஸ்பேட்" போன்றவற்றை 35 பர் செண்ட் மானியமாக கொடுக்கிறோம். எலிப்பொறிகளை வழங்குகிறோம்.

திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர் : இன்னும் எத்தனை எலிகள் பாக்கியிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : எலிகள் பூராவும் அழிக்கப் படவில்லை. எலிகளின் தொல்லை இருந்து கொண்டுதான் இருக்கிறது. பாம்புகள் எல்லாம் கொல்லப்பட்டதின் விளைவாக எலிகள் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, பாம்புகளை அகற்றியதால் தான் இந்த எலிப் பெருக்கம் அதிகமாகிவிட்டது. நீர் பாம்பு விஷப் பாம்பு அல்ல. அந்தப் பாம்பைத் தோலுக்காகப் பிடித்து விடுகிறார்கள். ஆகவே பாம்பு பிடிப்பதை ஒரு தடையாகப் போட்டு, அதிகமாகப் பாம்பை நாட்டில் நடமாடவிட்டால், நிச்சயமாக எலிகள் ஒழிந்துவிடும். தண்ணீர்ப் பாம்பு விஷமில்லாததாகும். ஆகவே இதில் முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினருடைய கேள்வி சிரிப்பிற்கு உரியதல்ல. முற்றிலும் உண்மை. பாம்பின் தோல் நல்ல விலைக்கு விற்கிறபடியால் அதைப்பிடித்து தோலை உரித்து விற்று விடுகிறார்கள். இந்தக் குறிப்பிட்ட பாம்பு விஷத்தன்மை உடையதல்ல. அதனால் பொது மக்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் கிடையாது. ஆகவே அதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, மத்திய அமைச்சர் எலிகளைத் தின்னலாம் என்று சொல்லவில்லை என்று பலமுறை கூறி விட்டார். அது இந்த அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் பத்திரிகையில் படித்த மாதிரிதான் நானும் படித்துப் பார்த்தேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : வட தேசங்களில் எலியை உணவு பொருளாக சாப்பிடுபவர்கள் இருப்பதாகத் தெரிகிறது. இங்கே லட்சக் கணக்கில் எலிகள் கிடைப்பதாகத் தெரிகிறது. ஆகவே இவற்றை எல்லாம் வீணாக்காமல் வடதேசங்களில் உள்ளவர்கள் சாப்பிடுவதற்கு அனுப்பு வதற்கு அரசாங்கம் தக்க முயற்சிகள் எடுப்பார்களா ?

Concessions to Christian Converts.

*201. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the concessions allowed to backward communities hitherto and extended to the Christian converts from backward community have been cancelled by the Government ; and

(*b*) the reasons therefor ?